**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 173/2018

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 4 |
| Name (திரு/திருமதி) | : | பச்சைமுத்து |
| Father's Name/ Husband's Name | : | ஏழுமலை |
| Village & Taluk | : | நெய்வானந்தம் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 62 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025**

1 முதல் 5 எதிரிகள் ஆஜர்,

**முதல் விசாரணை–**

1. அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 07.00 மணியளவில் 1ம் எதிரி குமரன் என்பவரின் வீட்டினிடம் 1ம் எதிரியின் மகன்களும், அ.சா.1(கிருஷ்ணமூர்த்தியின் ) மகன்களும் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். யார் யாரை அடித்தார்கள் என்றால் இரு தரப்பினரும் மாறி மாறி அடித்துக்கொண்டனர். பின்னர் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 என் உறவினர் என்றால் சரிதான். யார் யாரை எந்த ஆயுத்தத்தால் தாக்கினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். சண்டை நடந்ததாக சொல்லப்படும் தெருவில் எனது வீடு இல்லை என்றால் சரிதான். அ.சா.1 என் உறவினர் என்ற காரணத்தினால் எதிரிகளும், அ.சா.1ன் குடும்பத்தினரும் மாறி மாறி அடித்துக்கொண்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், உண்மையில், அ.சா.1ன் குடும்பத்தினர் தான் எதிரிகளை தாக்கினார்கள் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 173/2018

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 5 |
| Name (திரு/திருமதி) | : | சக்கரவர்த்தி |
| Father's Name/ Husband's Name | : | மொட்டையகவுண்டன் |
| Village & Taluk | : | நாராயணபுரம் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 70 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025**

1 முதல் 5 எதிரிகள் ஆஜர்,

**முதல் விசாரணை–**

அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களை தெரியும். அவர்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும் அவர்களும் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். சுமார் 9 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 9.00 – 10.00 மணியளவில் எனது வீட்டிலிருந்து வேட்டவலம் செல்வதற்காக நெய்வானத்தம் சாலை வழியாக நான் சென்று கொண்டிருந்தபோது 1ம் எதிரியின் வீட்டினிடம் கும்பலாக நபர்கள் இருந்தனர். என்னால் அவர்களை தாண்டி செல்ல இயலவில்லை. நான் அவர்களிடம் வழி விடும்படி கேட்டு அங்கிருந்து சென்றுவிட்டேன். நான் வேறு எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை தான் காவலர்கள் விசாரணையின்போதும் கூறினேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.